மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை :- **திரு. A.S. அமீர்தீன், B.A.,B.L.,L.L.M.,DJJJ.,Psy.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி,(முழு கூடுதல் பொறுப்பு)

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி.

2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2053 ஸ்ரீ சுபகிருது வருடம் மார்கழித் திங்கள்22 ஆம் நாள்

**இடைநிலை மனு எண்.393/2022-ல்**

**அசல் வழக்கு எண். 79/2020**

ரமேஷ் ...மனுதாரர் /வாதி

**// எதிர்//**

கே.எஸ். துரைசாமி ..எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 14.10.2022 ம்தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்த சூழ்நிலையில் கடந்த 23.12.2022 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு. கதாக அருசு தாயுமானவன், திரு.V.K. கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களும்,** எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு. P. பொன்னுலிங்கம்** அவர்கள் முன்னிலையாகியம், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று **06.01.2023** இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்குரையுடன் தாக்கல் செய்ய இயலாத தவறுதலை மன்னித்து இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள அனுமதித்து உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 7 விதி 14(3) மற்றும் பிரிவு 151 -ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுவின் சுருக்கம்** :-

மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கில் வழக்குரையுடன் ஆவணங்களை தாக்கல் செய்யப்படாத ஆவணங்களை தற்போது மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்துகொள்ளவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

3. **எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்** :-

வழக்கிற்கு பின்னிட்டு வாதியால்மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றும், மேற்படி ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்ய முடியாது என்றும், இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரையில் கூறப்பட்டுள்ளது.

4. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**5. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

ஒரு வழக்கில் அதன் சங்கதியை நிரூபிக்க அல்லது மெய்ப்பிக்க வேண்டுமென்றால் அதனை ஆவண சாட்சியம் மற்றும் வாய்மொழி சாட்சியங்கள் வாயிலாகத்தான் நீதிமன்றத்தில் நிரூபிக்க இயலும். அவ்வகையில் ஒரு ஆவணத்தை அதன் சங்கதியை பொருத்து குறியீடு செய்வதால் மட்டுமே அந்த ஆவணத்தை நிரூபித்ததாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்பதையும் குறியீடு செய்வது என்பது வேறு, நிரூபணம் அல்லது மெய்ப்பித்தல் வேறு என்பதை இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

மேலும், அந்த ஆவணத்தின் சங்கதியை மெய்ப்பிக்கவேண்டுமெனில் அந்த ஆவணத்தை கண்டிப்பாக குறியீடு செய்யவேண்டும் என்பதையும் இந்நீதிமன்றம் கருத்திற்கொள்கிறது.

இம்மனுவைப் பொருத்தவரை வழக்கிற்கு தேவையான ஒரு சில சான்றாவணங்கள் தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது என்றும், அதனை வைத்து வழக்கெழு மூலத்தையும்,

வழக்கினையும் தீர்மானிக்க இயலும் என்றும், மனுதாரர் கோரியுள்ள சங்கதிகளை பொறுத்து மேற்படி பிரதான வழக்கில் வாதி தரப்பில் சாட்சியம் முன்னிறுத்த அனுமதியளிக்கப்பட்டிருந்த சூழ்நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஒரு ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது செல்லத்தகாது என்பதை இம்மனுவில் தீர்மானம் இயலாது என்பதையும் மேற்படி ஆவணம் குறியீடு செய்யப்பட்ட பின்பு சாட்சிய சான்றாவணங்கள் பரிசீலனையில் மட்டுமே தீர்மானம் செய்யும் என்பதாலும், இம்மனுவின் மனுதாரர் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். அவர் தனது தரப்பினை இந்நீதிமன்றத்திற்கு முழுவதுமாக எடுத்துச்சொல்வதற்கு கூடுதலாக ஒரு வாய்ப்பினை இந்நீதிமன்றத்தில் கேட்டுள்ளார். மேற்படி வாய்ப்பில் மேற்படி மனுதாரர் தாக்கல் செய்ய முனைந்துள்ள ஆவணமானது இவ்வழக்கின் தன்மையை தீர்மானிக்க உதவுமா என்பதை வழக்கு விசாரணையின் முடிவில் மட்டுமே தீர்வுகாண இயலும்.

இம்மனுவினை நீதியின்பால் அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்ம் ஏற்படப்போவதில்லை என்பதை கருத்திற்கொண்டு இம்மனுவினை நீதியின் நலன் கருதி அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவில்,** இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 06.01.2023)அவையறியப் பகரப்பட்டது.

A S AMEERDHEEN

Digitally signed by A S AMEERDHEEN
DN: cn=A S AMEERDHEEN, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(மு.கூ.பொ)

-